**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC.30/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | கண்ணாயிரம் | Prosecution | LW-1 as PW3 |
| Father Name | முனியாண்டி | Defence | |
| Village | வெட்டந்தாங்கரை | Taluk | Sirkali |
| Calling | | Age | 65/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day
03.06.2025. சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி செந்தில் முருகன் என்னுடைய மைத்துனர் ஆவார். இரண்டாவது எதிரி என்னுடைய மாமியார் ஆவார்.

2. என்னுடைய மகன் கண்ணதாசன் என்பவருக்கு என்னுடைய சம்மதம் இன்றி எதிரிகள் ஒரு பெண்ணை பார்த்து சம்பந்தம் பேசினார்கள். கடந்த 26.05.2022 தேதியன்று எதிரிகள் எனது வீட்டிற்கு வந்தார்கள். நான் அவர்களிடம் எனது மகனுக்கு திருமணம் செய்வதற்கு நீங்கள் யார் என கேட்டேன். உடனே எனது மைத்துனர் என்னை கீழே கிடந்த ஒரு கல்லை எடுத்து தலையில் அடித்துவிட்டார். (சாட்சி தனது உச்சந்தலையை தொட்டுக்காட்டுகிறார்).

3. என்னுடைய சட்டை கிழிந்து ரத்தம் வந்தது. உடனே என்னை சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் அங்கு உள்நோயாளியாக ஒரு வாரம் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். நான் சிகிச்சையில் இருந்தபோது புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் சேர்ந்து அதிகாரிகள் வந்து என்னை விசாரித்தனர். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் கொடுத்த புகார் வாக்குமூலம் ஆகும் **அது அசாஆ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். என்னுடைய மூத்த மகன் திருமணமானவர் என்றாலும் நான் அவரோடு தான் வசிக்கிறேன் என்றாலும் சரிதான். என்னுடைய மகன் கண்ணதாசன் யாரோட வசிக்கிறார் என்றால் தற்போது என்னோடு தான் வசிக்கிறார் முன்பு எதிரிகளோடு அவர்கள் வீட்டில் வசித்தார். எனது மகன் கண்ணதாசனுக்கு எதிரிகள் தான் செலவு செய்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றாலும் அதனால் அவர்கள் எதிரிகளோடு தான் வசித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. என்னுடைய மனைவி எப்போது இறந்தார் என்றால் 2017ல் இறந்தார்.

2. எதிரி என்ன வகை கல்லால் என்னை அடித்தார் என்று என் புகாரில் சொல்லி உள்ளேன் என்றால் செங்கல்லால் அடித்ததாக குறிப்பிட்டு சொல்லி உள்ளேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த போது எதிரி கருங்கல்லால் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்து கொடுத்த புகாரில் போலீசார் சங்கதிகளை ஏற்கனவே எழுதி இருந்தார்களா என்றால் ஆமாம். அதில் போலீசார் என்ன எழுதி இருந்தார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் அதை படித்துக் காட்டினார்களா என்றால் படித்துக் காட்டினார்கள்.

3. நான் எப்போது மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் அடிபட்ட தேதி இரவு சுமார் 6.00 மணிக்கு சென்றேன். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து சீர்காழி அரசு மருத்துவமனை சுமார் 15 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது காலை 6.00 மாணிக்கு என்றால் சரிதான். நான் ஏன் தாமதமாக மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் முதலில் காவல் நிலையம் சென்றேன் அதன் பிறகு அவர்கள் அறிவுறுத்தியதன் பேரில் மருத்துவமனையில் சேர்ந்தேன்.

4. காவல் நிலையத்தில் நான் எடுத்த பூர்வமாக புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்த காலை 10.00 மணிக்கு கொடுத்தேன். என்னை அடித்ததாக சொல்லும் செங்கல்லை எடுத்து போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என என் புகாரியில் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் என் வீட்டு வாசலில் நடந்ததாக சொல்லி உள்ளேன். என்னிடமிருந்து புகார் வாக்குமூலம்

பெறப்பட்ட பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

5. இவ் வழக்கின் சாட்சிகள் கவியரசன் என்னுடைய மூத்த மகன் என்றாலும் மேலும் தாமரைச்செல்வி எனது உறவினர் என்றாலும் சரிதான். அதுபோல பட்டியல் சாட்சிகள் மணிவேல், திருஞானம் ஆகியோரும் எனக்கு உறவு என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் இடையே குடும்பப் பிரச்சனை இருக்கிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகளுக்கும் இந்த குற்ற சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் மேற்படி முன்விரோதம் காரணமாக அவர்களுக்கு எதிராக பொய்ப்புகார் கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் எனக்கு ஏற்பட்ட காயம் நான் தானாக கீழே வழுக்கி விழுந்ததால் ஏற்பட்ட காயம் என்றாலும் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**